திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக ஆய்வு நிலையில் இருந்தது. மிகவும் அவசியமான இந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து—'ப்ரையாரிடி' கொடுத்து—இதைச் செயலாக்க முனைந்திருந்தால், இந்தத் திட்டம் எப்போதோ நிறைவேற்றப்பட்டிருக்கும். இது மிகவும் அவசியமானதொரு திட்டம். எனவே, அரசு இதை மறுபரிசீலனைசெய்து இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவரவர்களே, கஞ்சனூடை திட்டத்தின்கீழ் ரூ. 1,55,000-ல் ஒரு கால்வாயையும், ரூ. 4,20,000-ல் ஒரு கண்மாயையும் அமைக்கத் திட்டமிட்டு இந்த இரண்டு திட்டங்களில் முதல் திட்டத்திற்கு அரசு ஆணை பிறப்பித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. தண்ணீர் போதுமான அளவில் இல்லாத காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திட்டம் தற்போது கைவிடப்பட்டிருக்கிறது. நிலைமை சீரடையும்போது இதை மறு பரிசீலனை செய்யலாம்.

வரதமாநதியின் குறுக்கே அணை

*18. வினா—**புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பழனிக்கருகில் உள்ள வரதமாநதி அணைக் கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான குறிப்பை பாசனத் தலைமைப் பொறியாளர் வருவாய்த்துறை வாரியத்தின் மூலம் அனுப்பியிருக்கின்றார். வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்பு கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் படும்.

புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டமானது அந்தப் பகுதி வாழ் மக்களால் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டுவந்த திட்டமாகும். கடந்த இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் இந்தத் திட்டம் மறுக்கப்பட்டே வந்தது. நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், மதிப்பிற்குரிய நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியினால் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்திட்டத்தினை

1972 ஆகஸ்ட் 9]

ஏற்றுக்கொண்டதற்காக நமது அரசுக்கு நான் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளும் நேரத்தில் இதை விரைவில் செயற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவில் இதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

விருதுநகர்-சிவகாசி சாலை

*19. வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகரிலிருந்து சிவகாசி செல்லும் வரை உள்ள சாலையை அகலப் படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிற்சாலைகளும் பல்வேறு வாணிப நிறுவனங்களும் உள்ள சிவகாசி நகரிலுள்ள முக்கிய சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் பெருமளவில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற் பட்டு, அவற்றின் காரணமாக அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு விடுகின்றன. எனவே, அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையினை அகலப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றும் இப்போது இல்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் குறிப்பிட்டதால் இதுபற்றி தலைமைப் பொறியாளர் பரிசீலனை செய் யும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்.

சுற்றுலாத்துறை ஓட்டல்கள்

*20. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தில் தற்போது ஓட்டல் ஏதேனும் இயங்கி வருகின்றனவா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.